# பத்திரிக்கை செய்தி

## பட்டா மாறுதல் உட்பிரிவு செய்ய ரூ.4,000/- லஞ்சம் கேட்டு பெற்ற பிர்க்கா பீல்டு சர்வேயர் மற்றும் தனிநபர் கைது

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி, பூதிமுட்லு கிராமத்தை சேர்ந்த திரு.சுரேஷ் என்பவர் தனது அத்தை கெம்பம்மாவிற்கு பாகமாக கிடைத்த 4 சென்ட் நிலத்தினை பட்டா மாறுதல் உட்பிரிவு செய்ய வேண்டி ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளார். இது தொடர்பாக வேப்பனப்பள்ளி பிர்க்கா பீல்டு சர்வேயர் திரு.ஜெயகாந்த் அவர்கள் மேற்படி நிலத்தினை அளந்து சப்டிவிசன் செய்துகொடுப்பதற்காக புகார்தாரர் திரு.சுரேஷ் அவர்களிடம் பணம் ரூ.4,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத சுரேஷ் இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறையில் புகாரளித்தார். அந்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்த லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் பிர்க்கா பீல்டு சர்வேயர் திரு.ஜெயகாந்தை பொறி வைத்து பிடிக்க நடவடிக்கை மேற்கொண்டனர். இன்று (18.02.2025) வேப்பனப்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு முன்பாக புகார்தாரர் திரு.சுரேஷ், பீல்டு சர்வேயர் திரு.ஜெயகாந்திடம் லஞ்ச பணம் ரூ.4,000/-த்தை கொடுத்துள்ளார். அதை பெற்றுகொண்ட ஜெயகாந்த் அப்பணத்தை தனது உதவியாளராக வைத்துள்ள தனிநபரான திலீப்குமார் என்பவரிடம் கொடுத்துள்ளார். அப்போது அங்கே மறைந்திருந்த தருமபுரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறை ஆளிநர்களால் லஞ்சம் வாங்கிய பீல்டு சர்வேயர் திரு.ஜெயகாந்த் மற்றும் திலீப்குமார் ஆகியோரை கைது செய்தனர்.